S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு” திருவள்ளுவர்

* COIMBATORE ஞாயிறு டிசம்பர் 28 * 2025 * மலர் -1 * இதழ்-210* VOL-1 * ISSUE-210 விலை ரூ.3 * பக்கம் -4

## விவசாயத்திற்கு ரூ.1.9 லட்சம் கோடியை ஒதுக்கியுள்ளோம்:

# எடப்பாடி பழனிசாமி மீது முதல்வர் ஸ்டாலின் கடும் தாக்கு!





**திருவண்ணாமலை,டிச.28**

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு நாங்கும் இதுவரை ரூ.1.9 லட்சம் கோடியை விவசாயத்திற்காக ஒதுக்கியுள்ளோம். ஆனால்சிலர்விவசாயிகள்போல்வேஷம்போட்டுஅதற்கு எதிராக செயல்படுவார்கள் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

திருவண்ணாமலையில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து பேசினார். திருவண்ணாமலை – திருக்கோவிலூர் சாலையில் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை சார்பில் வேளாண் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. கண்காட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். திருவண்ணாமலையில் வேளாண் மாநாடு போன்று கண்காட்சியை உழவர் நலத்துறையினர் ஏற்பாடு செய்துள்ளனர். உழவர்கள் பின் தான் நாம் எல்லோரும் ஒருங்கிணைந்து இருக்கிறோம் என்பதை உணர்த்தும் விதமாக இந்த விழா அமைந்துள்ளது. இந்த வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கை தொடங்கி வைப்பதில் நான் பெருமைப்படுகிறேன். விவசாயத்திற்கும், விவசாயிகளுக்கும் முன்னுரிமை அளித்து செயல்படுவதில் திராவிட மாடல் அரசு முன்னோடியாக உள்ளது. கடந்த ஓராண்டுகளில் 3 வேளாண் கண்காட்சி நடத்தப்பட்டுள்ளது. முதல் கண்காட்சி ஈரோட்டிலும், இரண்டாவது கண்காட்சி சென்னையிலும், மூன்றாவது கண்காட்சி திருவண்ணாமலையிலும் நடத்தப்படுகிறது. நாற்று நட்டு அறுவடை செய்யும் வரையில் விவசாயிகளுக்கு இருப்பது பிரசவ வேதனை. பாடுபடும் விவசாயிக்கு இயற்கையும், மண்ணும், கை கொடுத்தால் தான் மகசூல் சரியாக இருக்கும். இன்று தொழில் நுட்பம் வளர்ந்துள்ளது.

விவசாயிகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும். திமுக ஆட்சி பொறுப்பிற்கு வந்த பின்னர் வேளாண் துறை என்று இருந்ததை வேளாண்மை மற்றும் உழவர்நலத் துறை என்று மாற்றினோம். சிலர்விவசாயி வேடம் போட்டு அரசியல் செய்வார்கள். ஆனால் விவசாயிகளை பாதிக்கக் கூடிய சட்டங்களை ஆதரிப்பார்கள். விவசாயிகளின் போராட்டத்தை கொச்சை படுத்துவார்கள். விவசாயிகளின் நலனையும் வளர்ச்சியையும் திராவிட மாடல் அரசு முக்கியமாக பார்க்கிறது. அதற்காக வேளாண்மைக்கு என்று தனி பட்ஜெட் போடப்பட்டது. இதுவரை 5 வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 5 வேளாண் பட்ஜெட்டிலும் சேர்த்து விவசாயிகளுக்காக ஒரு லட்சத்து 94 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

முந்தைய ஆட்சியாளர்கள் கண்டுக்காத, கைவிட்ட 125 உழவர் சந்தைகளை நவீன வசதிகளுடன் புனரமைத்துள்ளோம். புதிதாக 14 உழவர் சந்தைகளையும் அமைத்துள்ளோம். பனை மரங்களை பாதுகாக்க பனை மேம்பாட்டு இயக்கம், உழவன் செயலி என ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம்.

கடந்த 5 ஆண்டுகளில் ஒரு லட்சத்து 82 ஆயிரம் புதிய இலவச மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 3 கோடியே 6 லட்சம் விவசாய நிலங்கள் பயன்படும். கடந்த 5 ஆண்டுகளில் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு ஆயிரத்து 681 கோடியே 76 லட்ச ரூபாயை நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இதில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சியர் தர்ப்பகராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, எம்.எஸ்.தரணிவேந்தன், மலையரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி, எஸ்.அம்பேத்குமார், உதயசூரியன், மணிக்கண்ணன், லட்சுமணன், வேளாண் உற்பத்தி ஆணையர் தட்சிணாமூர்த்தி, வேளாண் வணிக ஆணையர் ஆபிரகாம், வேளாண் இயக்குநர் முருகேஷ், தோட்டக்கலை இயக்குநர் குமாரவேல் பாண்டியன், சர்க்கரைத்துறை இயக்குனர் அன்பழகன், மாநகராட்சி மேயர் நிர்மலா வேல்மாறன், மாநில தடகள சங்க துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், முன்னாள் நகரமன்ற தலைவர் இரா.ஸ்ரீதரன், சீனியர் தடகள சங்க மாநில துணை தலைவர் ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா விஜயரங்கன், துரை வெங்கட், வணிகர் நல வாரிய உறுப்பினர் டி.எம்.சண்முகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்ட விக்டோரியா பொது அரங்கத்தினை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா பார்வையிட்டார். உடன் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், மாமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீ இராஜேஸ்வரி, வீ.கவி கணேசன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



காரியாபட்டி அருகே கல்குறிச்சியில் வரும் ஜனவரி 24ந்தேதி நடை பெறவுள்ள இளைஞரணி தென் மண்டல மாநாட்டு முன் ஏற்பாட்டு பணிகளை அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் ஆய்வு செய்தனர்.



பெத்தநாடாப்பட்டி ஸ்ரீமாயாண்டி சுவாமி கோவிலில் பாரம்பரிய பழம்படைக்கும் திருவிழா நேற்று நடைபெற்றது.

## 19 வயதிலேயே பலரை ஏமாற்றி 8 திருமணங்கள் செய்த பெண்!

**ஸ்ரீகாகுளம், டிச.28**

ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகுளம் மாவட்டம் இச்சாபுரம் நகரில் உள்ள கர்ஜி தெருவைச் சேர்ந்த வாணி (19). இவருக்கும் கர்நாடகாவைச் சேர்ந்த ஒருவருக்கும் சமீபத்தில், ஸ்ரீகாகுளம் மாவட்டம் சோம்பேட்டையில் உள்ள துர்கா தேவி கோவிலில் திருமணம் நடந்தது. இந்த நிலையில் திருமணத்திற்குப் பிறகு, மாப்பிள்ளையின் சொந்த ஊரான கர்நாடகாவிற்குச் மணமக்கள் சென்று கொண்டிருந்தனர். அப்போது விசாக ப்பட்டினம் ரெயில் நிலையத்தில் கழிப்பறைக்குச் செல்வதாகக் கூறிய மணப்பெண் வாணி இறங்கித் தப்பிச் சென்றுவிட்டார். பின்னர், அவருக்கு என்ன ஆனதோ என்று கவலைப்பட்ட மாப்பிள்ளையும் அவரது குடும்பத்தி னரும் பல இடங்களில் அவரைத் தேடினர் . இறுதியில்வாணியை இச்சாபுரத்தில்உள்ளஅவரதுஅத்தை வீட்டில் கண்டுபிடித்தனர்வா ணிக்கு மாப்பிள்ளை வீட்டார் ஏற்கனவே ஆடை மற்றும் பிற செலவுகளுக்காக ஒரு லட்சம் ரூபாய் பணம் கொடுத்திருந்தனர். மேலும், வாணி அந்தப் பணம் அனைத்தையும் எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றது தெரியவந்தது இந்த விஷயம் அறிந்து அதிர்ச்சியடைந்த மாப்பிள்ளை வீட்டார், வாணியின் அத்தை சந்தியாவைச் சந்தித்து, தங்களுக்குப் பணத்தைத் திருப்பித் தருமாறு கேட்டனர்.

எனினும் அவர் பணத்தை திருப்பி தரவில்லை.இதற்கிடையே வாணி இதேபோல பலரை ஏமாற்றியது தெரிந்தது. விசாரித்த போது வாணியின் உண்மைக் கதை வெளிச்சத்திற்கு வந்தது.

எனவே அவர் இதுவரை 8 பேரைத் திருமணம் செய்ததற்கான புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை ஆதாரங்களாகச் சேகரித்து காவல்துறையினரிடம் வாணியால் ஏமாற்றப்பட்ட நாகிரெட்டி மற்றும் கேசவரெட்டி ஆகிய இருவரும் இச்சாபுரம் காவல் நிலையத்திற்குச் சென்று காவல்துறையினரிடம் புகார் அளித்தனர். ஆனால், இப்போது அவருக்கு 19 வயது ஆகிவிட்டதால், அவரின் திருமணம் சம்பந்தமான அனைத்து விவகாரங்களும் வெளிச்சத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



கிருஷ்ணகிரி அணை, அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமை பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் ஆய்வு மேற்கொண்டார். அருகில் மாவட்ட சுகாதார அலுவலர் ரமேஷ் குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் உமாசங்கர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



பள்ளி அரையாண்டு விடுமுறையை யொட்டி உடுமலை அருகே உள்ள பஞ்சலிங்க அருவியில் சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ளது.

## சிவகாசி அருகே

# இரும்பு கேட் விழுந்து 2 சிறுமிகள் சாவு!

**சிவகாசி.டிச.28–**

சிவகாசி அருகே சுவர் இடிந்து விழுந்து 2 சிறுமிகள் இறந்தனர். இந்த காலை இந்த பரிதாப சம்பவம் நடந்தது.

சிவகாசி அருகே உள்ள கொங்கலாபுரத்தை சேர்ந்தவர் ராஜாமணி. இவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார். இவரது மனைவி ராஜேஸ்வரி. இவர் சிவகாசி காவல்நிலையத்தில் போலீசாக பணியாற்றி வருகிறார். இவர்களுக்கு ராம்(12) என்ற மகனும் , கமலிகா(9). மகளும் உள்ளனர்.இதில் ராம் 7–ம் வகுப்பும்கமலிகா2–ம்வகுப்பும் படித்து வந்தனர்.



ராஜேஸ்வரியின் தங்கை தனலெட்சுமி இவர் சங்கரன்கோவில் அருகே உள்ள தேவர்குளத்தை சேர்ந்தவர். தனலெட்சுமி நர்ஸ்சாக பணியாற்றி வருகிறார். தனலெட்சுமியின் மகன்ரிகாஷ், மகள்ரிஷிகா (4). தற்போது பள்ளி விடுமுறை என்பதால் ராஜேஸ்வரியின் வீட்டிற்கு அவரது தங்கை தனலெட்சுமி தனது குழந்தைகளுடன் வந்திருந்தார்.

இந்நிலையில் இன்று காலை கமலிகாவும், ரிஷிகாவும் வீட்டின் முன்பு விளையாடிக்கொண்டிருந்தனர். அப்போது, இரும்பு கேட்டும் சுற்றுசுவரும் இடிந்து இவர்கள் மீது விழுந்தது. இதனால் சிறுமிகளின் அலறல் சத்தம் கேட்ட அக்கம்பக்கத்தினர் ஓடி வந்து பார்த்து இடிபாடுகளை அகற்றினர். இதில் மூச்சு பேச்சு இல்லாமல் கிடந்த இருவரையும் தூக்கிக்கொண்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.செல்லும் வழியில் இருவரும் பரிதாபமாக இறந்தனர்.

இதுகுறித்து சிவகாசி நகர போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.



# கே.ஆர்.பி.டேம் பெரியமுத்தூர் கிராமத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்; எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

**கிருஷ்ணகிரி டிச.28**

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியம், கே ஆர் பி டேம் பெரியமுத்தூர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின்கீழ் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், கலந்துகொண்டு குத்து விளக்கேற்றி முகாமினைதுவக்கி வைத்து பார்வையிட்டார்., உடன் அனைத்து துறை அரசு மருத்துவர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,அனைத்து அணிகளின் தலைவர்கள்,துணை தலைவர்கள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை கழக செயலாளர், வாக்கு சாவடி முகவர்கள், கழகத் தோழர்கள், வட்ட செயலாளர்கள், வட்ட பிரதநிதிகள்,வார்டு உறுப்பினர்கள்,ஊர் பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# தோமையார்புரத்தில் 21ஆம் ஆண்டு சுனாமி நினைவு; சௌந்தர்ராஜன் எம்.பி அஞ்சலி!

**நெல்லை டிச.28**

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி ஆழிப் பேரலையில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்ததை நினைவுகூரும் வகையில் அதன் 21ஆம் ஆண்டு நினைவு தினம் தமிழகம் முழுவதும் கடற்கரை கிராமப் பகுதிகளில் அனுசரிக்கப்பட்டு வருகிறது.நெல்லை மாவட்டத்தில் உள்ள பல்வேறு கடற்கரை கிராமங்களில் மீனவர்கள் கடலில் பால் ஊற்றியும் மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர்

தோமையார்புரம் கடற்கரை கிராமத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை, அதிமுக மேற்கு ஒன்றிய செயலாளர் அந்தோணி அமலராஜா ஏற்பாடு செய்திருந்தார்.

கிழக்கு ஒன்றிய செயலாளர் KPK. செல்வராஜ் முன்னிலையில், முன்னாள் எம்.பி. சௌந்தரராஜன் தலைமையில் அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஒன்றிய மீனவர் அணி செயலாளர் சூசை அந்தோணி, மாவட்ட மற்றும் ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள் சாம்சோன், மார்ட்டின், சூசை வியாகுலம், வினிஸ்டர், நீயுட்டன், ஜோசப், ஸ்டெல்லா, துரைசாமி, சண்முக பாண்டியன், நம்பிராஜன், ஆவுடை மணிகண்டன், லிங்கதுரை, செல்வன், குமரேசன், விநாயகம், சுப்புராமன், வினேஸ்ராஜா, செல்வராஜேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மேலும் ஏராளமான மீனவ பொதுமக்களும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இந்த நினைவு தின நிகழ்ச்சி, சுனாமி பேரழிவின் கொடூரத்தை நினைவூட்டுவதோடு, உயிரிழந்தவர்களின் நினைவுகளை மரியாதையுடன் போற்றும் வகையில் அமைந்தது.முன்னதாக, மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்று திரண்டு உயிரிழந்த ஆன்மாக்களின் நலனுக்காக சிறப்பு ஜெபம் மேற்கொண்டனர்.




## 100நாள் வேலைத் திட்டம் ஒழிப்பு எதிப்பு:

# ஆமூரில் சந்திரசேகரன் மாவட்ட கவுண்சிலர் ஒன்றிய கழக செயலாளர் தலைமையில் ஆர்ப்பாட்டம்!

**திருவெண்ணெய்நல்லூர் , டிச.28**

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம் உளுந்தூர்பேட்டை சட்ட மன்ற தொகுதி திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் நடவடிக்கையை கண்டித்து, ஆமூரில் அஞ்சலகம் அலுவலகம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் சிறப்பு அழைப்பாளராக சந்திரசேகரன் ஒன்றிய கழக செயலாளர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.இதில் ஒன்றிய அவைத்தலைவர் கலிவரதன் ஒன்றிய பொருலாளர் மைக்கல் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பிரேம் தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள் சுப்பரமணியன் அய்யனார் ஸீதர் வீராசாமி மாவட்ட தொழிலாளர் அணி துணை தலைவர் சக்கரவர்த்தி மற்றும் ஒன்றிய குழு உறுப்பினர் ஜெயராமன்

ஊ.ம.தலைவர் சுப்பரமணியன் முத்துராமன் ஏரி நீர்பான தலைவர் ஊ.ம.து.தலைவர் முத்துக்குமரன் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கரிகாலன் பெரியசெவலை ஊ.ம.தலைவர் வீரப்பன் மற்றும் சரவணபாக்கம் ஊ.ம.தலைவர் சிவராஜ் ஒன்றிய மாணரணி அமைப்பாளர் குருமூர்த்தி மற்றும் டி.கொளத்தூர் க.ஏழுமலை ஒன்றிய மாணரணி துணை அமைப்பாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# என்னை நீக்கும் அதிகாரம் ராமதாசுக்கு மட்டுமே உண்டு; ஜி.கே.மணி பரபரப்பு பேட்டி!



**சேலம், டிச.28**

பாட்டாளி மக்கள் கட்சியின் ராமதாஸ் தரப்பு ஆதரவாளரான ஜி.கே.மணியை, அன்புமணி கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், சேலத்தில் செய்தியாளர்களை சந்தித்து ஜி.கே.மணி, பாமக நிறுவனர் ராமதாசுடன் கடந்த 46 வருடமாக தான் பயணிப்பதாகவும், தன்னை கட்சியிலிருந்து நீக்குவது என்றால் ராமதாசிற்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என்றும், மேலும் உச்ச நீதிமன்ற தீர்ப்பின் படியும், தேர்தல் ஆணையத்தின் அறிக்கையின் படியும், பாமகவிற்கு தற்போது உரிய அங்கீகாரம் இல்லாததால், அக்கட்சியின் தலைவர் யார் என்பதை அறிவிக்கும் அதிகாரம்,

தேர்தல் ஆணையத்திற்கு இல்லை என்று தெரிவித்துள்ளதால், பாமகவின் தலைவர் என்று சொல்லிக் கொள்வதற்கு, அன்புமணி க்கு தகுதி இல்லை என இதிலிருந்து தெளிவாக தெரிவதாகவும், எனவே தன்னை கட்சியிலிருந்து நீக்குவதற்கு ராமதாசுக்கு மட்டுமே தகுதி உள்ளது என, ஜிகே மணி தெரிவித்திருப்பது பாமக வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தூத்துக்குடியில் எம்.ஜி.ஆர். சிலைக்கு சி.த.செல்லப்பாண்டியன் மரியாதை!

**தூத்துக்குடி டிச.28**

தூத்துக்குடி அதிமுக பொதுச்செயலாளரும் , எதிர்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிச்சாமி உத்தரவிற்கிணங்க அதிமுக நிறுவனர் எம்ஜிஆரின் 38ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, மாநில வர்த்தக அணி சார்பில் டூவிபுரம் அண்ணாநகர் சந்திப்பு, டூவிபுரம் வர்த்தக அணி அலுவலகம் ஆகிய இடங்களில் அலங்கரிக்கப்பட்ட எம்ஜிஆர் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து பின்னர் பழைய மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள எம்ஜிஆர் சிலைக்கும் தருவை மைதானம் முன்பு உள்ள சிலைக்கும் மாலை அணிவித்து மாநில வர்த்தக அணி செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சி.த.செல்லப்பாண்டியன் மலர் தூவி மரியாதை செய்தார். பின்னர் முடி காணிக்கை செலுத்திய செல்வகுமாருக்கு புத்தாடை வழங்கி கௌரவித்து எம்.ஜி.ஆர் புகழ்பாடினார். நிகழ்ச்சியில் முன்னாள் எம்.பி நட்டார்ஜி, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் ராஜா, மாவட்ட துணைச்செயலாளர் சந்தனம், வர்த்தக அணி செயலாளர் துரைசிங், எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் ஜோதிமணி, ஜெ பேரவை இணைச் செயலாளர் ஜீவா பாண்டியன், முன்னாள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ராஜகோபால், முன்னாள் நகர்மன்ற தலைவர் மனோஜ்குமார், மாவட்ட மீனவரணி துணை தலைவர் டெலஸ்பர், சிறுபான்மை பிரிவு பொருளாளர் பிச்சை டாஸ்மாக் அண்ணா தொழிற்சங்க மாவட்ட செயலாளர் விஜயகுமார் முன்னாள் மீனவரணி செயலாளர் அகஸ்டின் முன்னாள் மத்திய கூட்டுறவு பண்டக சாலை தலைவர் எட்வின் பாண்டியன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி,பர்கூர் மற்றும் வேப்பனஹள்ளி ஆகிய சட்ட மன்றத்தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட தனது விருப்ப மனுவினை தமிழக விவசாய அணியின் மாநில தலைவர் பவன்குமார் அவர்களிடம் முன்னாள் மாவட்டத் தலைவர் எல்.சுப்பிரமணியன் வழங்கினார்.

## மத்தூர் ஊராட்சியில்

# பனை ஓலை பயிற்சி: ஒன்றிய கழக செயலாளர் வசந்தரசு சான்றிதழ் வழங்கினார்!



**போச்சம்பள்ளி டிச.28**

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த மத்தூரில் பனை ஓலை பொருட்கள் தயாரிப்பு பயிற்சி பெற்ற பெண்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன.தருமபுரி மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு விற்பனை சம்மேளனம் மத்தூர், நவீன தொழில்நுட்ப முறையில், பனை ஓலை மூலம் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கான முகாம் நவ.28ல் துவங்கி டிச.22 வரை 25 நாட்கள் நடந்தது. இதில் மத்தூர் சுற்றுவட்டாரத்தை சேர்ந்த 25 பெண்கள் பனை ஓலை மூலம் கூடை, தட்டு, அலங்கார பொருட்கள், மாலை உட்பட பல்வேறு பொருட்களை தயாரிக்க பயிற்சி பெற்றனர்.

பயிற்சி பெற்றவர்களுக்கு மத்தூர் கிளை பனை பொருள் வளாகத்தில் தர்மபுரி மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு விற்பனை சம்மேளனம் உதவி இயக்குனர் சீனிவாசன் தலைமை வகித்தார். மத்தூர் கிளை அலுவலக பொறுப்பா

ளர் கண்ணகி வரவேற்றார். திமுக மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் அரிமா தனசேகரன் முன்னிலையில் சிறப்பு அழைப்பாளர்களாக மத்தூர் திமுக வடக்கு ஒன்றிய செயலாளர் குண.வசந்தரசு மற்றும் தோட்டக்கலை அலுவலர் மது பிரியா ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி சிறப்புரையாற்றி 25 நாட்களுக்கு பயிற்சி பெற்ற 25 பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி தேவையான உபகரணங்கள் வழங்கினார். பயிற்சி பெற்ற பெண்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் இறுதியில் பயிற்சியாளர் ஜானகி நன்றி கூறினார்.






## எட்டயபுரத்தில்

# பாரதி பிறந்தநாள் கவியரங்கம் இன்று நடக்கிறது!

**தூத்துக்குடி டிச.28**

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் பாரதி நினைவு மண்டபத்தில் வைத்துஇன்று மகாகவி பாரதி 144 வது பிறந்தநாளை முன்னிட்டு பாரதியார் பிறந்தநாள் கவியரங்கம் நடைபெறுகிறது.

இதில் நூல் வெளியீடும்,கவிஞர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டு தெரிவித்தலும் நடைபெறுகிறது. இந்நிகழ்வை அனைத்துலக தமிழ்சங்கம்,மற்றும் மதுரை காமராசர் பல்கலை.,ஆகியவை இணைந்து நடத்துகிறது.

நிகழ்ச்சிக்கு மதுரை காமராசர் பல்கலை. தமிழ்துறை தலைவர் சத்தியமூர்த்தி தலைமை தாங்குகிறார்.

கவிஞர்கள், அருணாசுந்தரராசன்,பரணிசுபசேகர்,இளையகோபால் மற்றும் பாலசரஸ்வதி,தில்லிகுமார் ஊடகவியலாளர் கி.ம. சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். நிகழ்ச்சியில் ராஜேஸ்வர் வரவேற்புரை ஆற்றுகிறார். நிகழ்ச்சியை முத்துவிஜயன் தொகுத்து வழங்க உள்ளார்.

## மூதாட்டி கொலை வழக்கில்

# குண்டர் சட்டத்தில் இளைஞர் கைது!

## கலெக்டர் உத்தரவு!!

**ஈரோடு,டிச28**

மூதாட்டியை வீடு புகுந்து கொலை செய்து 5 பவுன் நகையை கொள்ளையடித்த வழக்கில் கைது செய்யப்பட்ட தனியார் நிறுவன ஊழியர் மீது குண்டர் சட்டத்தின் கீழ் கைதுநடவடிக்கை எடுக்க கலெக்டர் உத்தரவு ஈரோடு பெரியசேமூர், முதலிதோட்டம், எல்விஆர் காலனி பகுதியைச் சேர்ந்தவர் கமலம் (68).

அதே பகுதியில் ராமநாதபுரம் மாவட்டம் திருவாடனை, தோப்பு காலனியை சேர்ந்த பன்னீர் செல்வம் மகன் ராமு (20) என்பவரும் தங்கி இருந்தார். இந்நிலையில் தனியாக வசித்து வந்த கமலத்தை கடந்த 27ஆம் தேதி ராமு கொலை செய்துவிட்டு 5 பவுன் நகையை கொள்ளையடித்துச் சென்றார். இதையடுத்து ராமுவை கைது செய்த போலீஸார், நீதிமன்ற உத்தரவின்படி கோவை மத்திய சிறையில் அடைத்தனர். நகைக்காக மூதாட்டியை கொலை செய்த ராமு மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா பரிந்துரைத்தார்.

இந்த பரிந்துரையை ஏற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி, ராமு மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து உத்தரவிட்டார். இதற்கான உத்தரவு நகலை சிறையில் உள்ள ராமுவிடம் போலீஸார் அளித்தனர்.

# டார்க் சாக்லேட் பாதாம் ஆரஞ்சு கேக் உடன் புத்தாண்டை ஆரோக்கியமாக கொண்டாடுங்கள்!

**கோவை, டிச.28**



இந்த புத்தாண்டை பாதாம் மாவு, டார்க் சாக்லேட், துருவிய ஆரஞ்சு தோல் மற்றும் மேப்பிள் சிரப் ஆகியவற்றைக் கொண்டு செய்யப்பட்ட இந்த 'டார்க் சாக்லேட் பாதாம் ஆரஞ்சு கேக்' உடன் ஆரோக்கியமாக மகிழ்ச்சியாக கொண்டாடுங்கள். செப் கபிதா சிங்கினால் தயாரிக்கப்பட்ட இந்த கேக், பண்டிகை காலத்தை சுவையுடன் ஆரோக்கியமானதாக மாற்றுகிறது. நெய் மற்றும் முட்டைகளைப் பயன்படுத்தி, பாதாம் மாவில் செய்யப்படும் இந்த கேக் மிகவும் மென்மையாகவும், ஈரப்பதத்துடனும் இருக்கும். இதில் சாக்லேட் மற்றும் ஆரஞ்சு சுவை கலந்து இருப்பதால், இது உடலுக்குச் சத்தான அதே சமயம் நாவில் கரையும் ஒரு சுவையான இனிப்பாக அமைகிறது. இது தயாரிப்பதற்கு எளிதானது, பகிர்ந்துகொள்ள ஏற்றது மற்றும் இந்த பண்டிகைக் காலத்திற்கு ஏற்ற ஆரோக்கியம் மிகுந்த இனிப்பாக இது இருக்கும். பண்டிகை கால உணவுப் பழக்கம் குறித்து மேக்ஸ் ஹெல்த்கேர் நிறுவனத்தின் உணவுமுறை பிராந்தியத் தலைவர் ரித்திகா சமதார் கூறுகையில், நமது உடல் நலத்தை பாதிக்காத வகையில் நாம் பண்டிகை கால உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும். கலிபோர்னியா பாதாம் பருப்பில் இயற்கையாகவே புரதம், நார்ச்சத்து, நல்ல கொழுப்புகள், வைட்டமின் ஈ மற்றும் அத்தியாவசிய தாதுக்கள் நிறைந்துள்ளன. இது இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு, நாள் முழுவதும் தேவையான ஆற்றலையும் வழங்குகிறது. மேலும், இது பசியைக் கட்டுப்படுத்தி வயிறு நிரம்பிய உணர்வைத் தருவதால், பண்டிகை காலங்களில் அதிகமாகச் சாப்பிடுவதைத் தவிர்க்க உதவுகிறது. கேக்கில் பாதாமைப் பயன்படுத்துவதன் மூலம், ருசி உடன் உடல் நலத்தையும் பாதுகாக்க முடியும் என்று தெரிவித்தார்.இந்த கேக், விடுமுறை நாட்களுக்கு ஏற்ற ஒரு இனிப்பு வகையாகும். ருசியாக இருந்தாலும் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் உதவுகிறது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



## ஒத்த கருத்துடைய கட்சிகள் இணைந்து வரும் தேர்தலில் தி.மு.க.வை வீழ்த்துவோம்;நயினார் நாகேந்திரன் பேட்டி!

கிருஷ்ணகிரி டிச.28

கிருஷ்ணகிரியில் செய்தியாளர்களை சந்தித்த அவர்., 'கிறிஸ்துவ மக்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அதிமுக நிர்வாகிகளுடன் சந்திப்பு மட்டுமே நடைபெற்றது. தொகுதி பங்கீடு குறித்து எதுவும் பேசவில்லை. ஊடகங்கள் தொகுதி பங்கீடு குறித்து வெளியிட்ட கருத்து தவறானது. O பன்னீர்செல்வம், TTV தினகரன் கூட்டணியில் இருந்து வெளியில் உள்ளதால் அவர்களின் முடிவு குறித்து கருத்து கூற விரும்பவில்லை. இன்னும் தேர்தலுக்கு மூன்று மாதங்கள் உள்ளதால் கடைசி நேரத்தில் கூட மாற்றங்கள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. திமுக தலைவர் ஸ்டாலின் இந்துக்களின் பண்டிகைகளுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பது இல்லை. போலியான மதச்சார்பின்மை காரணமாக மக்களுக்கான ஆட்சியாக நடத்தாமல் தமக்கான ஆட்சியாக நடத்திக் கொண்டிருக்கிறார். திமுக உறுப்பினர்களுக்கு மட்டுமே கூட்டுறவு கடன் , பொய்யான வாக்குறுதிகளை கொடுத்து ஆட்சிக்கு வந்தது என்று எல்லாமே பொய்யாகவே உள்ளது. மாணவர்களுக்கு நவோதயா பள்ளி கொடுத்தால் வேண்டாம் என்பது, மத்திய அரசின் நிதியினை பெற்றுக் கொண்டு மாநில அரசின் நிதியாக விளம்பரம் செய்வது இது தான் திமுகவின் வேலையாக உள்ளது. கடந்த 11 ஆண்டுகளில் 14 லட்சத்து 85 ஆயிரம் கோடி ரூபாய் மத்திய அரசு தமிழகத்திற்கு நிதி வழங்கி உள்ளது. மத்திய அரசு 100 நாட்கள் வேலை திட்டத்தை 125 நாட்களாக உயர்த்தி உள்ளது. இதனை திமுக மறைத்து போராட்டம் நடத்துகிறது. இது போன்ற பொய்யான அரசை நடத்திக் கொண்டிருக்கும் ஸ்டாலின் அவர்களுக்கு எதிரான ஒத்த கருத்துடைய கட்சிகள் இணைந்து வரும் தேர்தலில் திமுகாவை வீழ்த்துவோம் ' என்று கூறினார். இந்த செய்தியாளர் சந்திப்பின்போது மாநிலத் துணைத் தலைவர் ராமலிங்கம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தலைவர் கவியரசு மாநில செயலாளர்கள், துணைத் தலைவர்கள். தமிழ்ச்செல்வி சுந்தரமூ ர்த்தி, தருமன், பொருளாளர், ராணா, உள்ளிட்ட யாராலமான காவிய சொந்தங்கள் கலந்து கொண்டனர்.



## ஆம்பூர் அருகே தமிழக அரசு, துறை சார்ந்த அதிகாரிகளை கண்டித்து கிராம மக்கள் சாலை மறியல்!

ஆம்பூர், டிச.28

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த திருமலைகுப்பம் ஊராட்சியில் கடந்த சில மாதங்களாக 100 நாள் வேலை திட்டத்தில் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வேலை வழங்குவதாகவும் ஊராட்சியில் 15 பேருக்கு மட்டுமே வேலை வழங்கி வருவதாக குற்றம்சாட்டியுள்ளனர்.

மேலும் அப்பகுதி பகுதியில் தொழிற்சாலைகள் எதுவும் இல்லாததால் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்படுவ தாகவும், பகுதி மக்கள் அனைவருக்கும் தொடர்ந்து வேலை வழங்க வேண்டும் என கூறி மத்திய மாநில அரசு மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளை கண்டித்து கிராம மக்கள் மாதனூர் ஒடுகத்தூர் சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுரேஷ், மகராசி மற்றும் காவல்துறையினர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி தொடர்ந்து வேலை வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்த பின்னர் சாலை மறியல் போராட்டத்தை கைவிட்டு கலந்து சென்றனர்.

இதனால் மாதனூர் ஒடுகத்தூர் செல்லும் சாலையில் சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## சேலம் அருகே நின்ற லாரி மீது அடுத்தடுத்து வாகனங்கள் மோதல்; டிரைவர் பலி!

### வேனின் டீசல் 'டேங்க்'கில் தீப்பிடித்தது; அதிர்ஷ்டவசமாக பயணிகள் உயிர் தப்பினர்!!



சேலம், டிச. 28

சேலம் அருகே நின்ற லாரி மீது அடுத்தடுத்து வாகனங்கள் மோதின. இதில் லாரி டிரைவர் பலியானார். ஒரு வேனின் டீசல் டேங்க்கில் தீப்பிடித்து பரவியது. எனினும் அதில் வந்த சுற்றுலா பயணிகள் உயிர் தப்பினர்.

சேலத்தில் இருந்து ஓமலூர் நோக்கி, களிமண் ஏற்றிக்கொண்டு நேற்று இரவு ஒரு லாரி புறப்பட்டது. சேலம் அடுத்த மாமாங்கம் பகுதியில் சென்றபோது டீசல் தீர்ந்ததால் நடுவழியில் நின்றது.

இதனால் டிரைவர், டீசல் வாங்கி வர சென்றார். இருள் சூழ்ந்த அப்பகுதியில் லாரி நிற்பது தெரியாமல், தாராபுரத்தில் இருந்து பெங்களூருவுக்கு நெய் பாட்டில் ஏற்றி வந்த தனியார் நிறுவன லாரி நின்றுகொண்டிருந்த லாரி மீது மோதியது. இதில் தனியார் நிறுவன லாரியின் முன் புறம் முழுவதும் சேதமானது. அதனை ஓட்டி வந்த திருப்பூர் மாவட்டம் நெகமத்தை சேர்ந்த டிரைவர் கோபி (25), சம்பவ இடத்திலேயே பலியானார்.

இதன் பின்னால், 10–க்கும் மேற்பட்ட சுற்றுலா பயணியருடன், பெங்களூரு நோக்கி சென்ற வேன் லாரியின் மீது மோதியது. இதனால் பயணித்தவர்கள், லேசான காயங்களுடன் வேனில் இருந்து இறங்கினர். டிரைவரின் கால் மாட்டிக்கொண்டதால், ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு, பொதுமக்கள் உதவியு டன் அவரை மீட்டனர். இந்நிலையில் வேனின் டீசல் டேங்க் உடைந்து தரையில் வழிய, அதில் தீப்பற்றி கொழுந்து விட்டு எரிந்தது.

இதுபற்றி தகவல் அறிந்து விரைந்து வந்த சூரமங்கலம் தீயணைப்பு நிலைய வீரர் கள் தீ பரவாமல் கட்டுப்படுத்தி அணைத்தனர். ஆனாலும் வேன் முற்றி லும் எரிந்து சாம்பலானது. துணை கமிஷனர் கேழ்கர் சுப்ரமண்ய பாலசந்தரா, சூரமங்கலம் போலீசார் விரைந்து வந்து, விபத்தில் சிக்கிய வாக னங்களை மீட்டு போக்குவரத்தை சீர்படுத்தினர். இதனால் ஒரு மணி நேரத் துக்கு பின் போக்குவரத்து பாதிப்பு சீரானது.

### சேலம் டி.வி. நடிகரிடம்

## இறப்பு சான்றிதழுக்கு லஞ்சம் கேட்ட கிராம நிர்வாக அதிகாரி 'சஸ்பெண்ட்'!

சேலம் டிச 28

சேலம் அம்மாபேட்டை வித்யா நகரைச் சேர்ந்தவர் கோபிநாத். இவரது மகன் பாலாஜி(45). இவர் சின்னத்திரையில் துணை நடிகராக பணியாற்றி வருகிறார். கோபிநாத்தின் முதல் மனைவி லலிதா, மகள் வசந்தி ஆகியோர் கடந்த 1978ம் ஆண்டு இறந்து விட்டனர். இந்த நிலையில், பாலாஜி தனது பெரியம்மா மற்றும் அக்காவிற்கு இறப்பு சான்றிதழ்கள் கேட்டு, கடந்த சில மாதங்களுக்கு முன், சேலம் மாநகராட்சி அலுவலகத்தில் விண்ணப்பித்தார். இந்த மனு, தற்போது பெரியேறி கிராம நிர்வாக அலுவலகத்தில் விசாரணையில் உள்ளது. இந்த மனுவின் நிலை குறித்து அறிவதற் காக, பாலாஜி கடந்த சில நாட்களுக்கு முன், கிராம நிர்வாக அலுவலகத்துக்கு வந்தார். அங்கு பணியில் இருந்த கிராம நிர்வாக அலுவலர் ராஜசேகர்(45) என்பவரை சந்தித்து கேட் டார். அப்போது, அந்த மனுக்களை பரிசீலித்து வருவாய் ஆய்வாளருக்கு அனுப்புவதற்கு ரூ.2 ஆயிரம் லஞ்சம் கேட்டார். ஆனால், லஞ்சம் கொடுக்க விரும்பாத பாலாஜி, இது குறித்து சேலம் லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் புகார் கொடுத்தார். இதையடுத்து, லஞ்ச ஒழிப்பு போலீசாரின் அறிவுரையின் பேரில், பாலாஜி ரசாயனம் பவுடர் தடவிய ரூ.2 ஆயிரம் பணத்துடன் கிராம நிர்வாக அலுவலகத்துக்கு வந்தார். பின்னர், பாலாஜியிடம் இருந்து லஞ்ச பணத்தை கிராம நிர்வாக அலுவ லர் ராஜசேகர் வாங்கிய போது, அங்கு மறைந்திருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் ரவிக்குமார், நல்லம் மாள் தலைமையிலான போலீசார், அவரை கைது செய்து செய்தனர். பின்னர், அவரை சேலம் கோர்ட்டில் ஆஜர்படுத்தி, மத்திய சிறையில் அடைத்தனர். இந்த நிலையில் சிறையில் அடைக்கப்பட்ட கிராம நிர்வாக அலுவலரை பணியிடை நீக்கம் செய்து அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

### 2 ஆடுகளை கடித்துக் கொன்ற

## தெருநாய்களை கட்டுப்படுத்த பொதுமக்கள் கோரிக்கை!

ஈரோடு,டிச.28

ஈரோடு மாவட்டத்தில் தெரு நாய்கள் தொல்லை அதிகரித்து வருகிறது, குறிப்பாக விவசாயிகள் வளர்க்கும் கால்நடைகளை தொடர்ந்து கடித்துக் குதறி வருகிறது.

இந்த நிலை ஈரோடு வாய்க்கால் மேட்டுப்பகுதியை சேர்ந்த சோமசுந்தரம் கால்நடைகளை வளர்த்து வருகிறார் இரவு வழக்கம் போல் ஆட்டுப்போட்டியில் ஆடுகள் அடைத்துவிட்டு துவங்க சென்று விட்டார் நேற்று காலை ஆட்டுப்பட்டி வந்து பார்த்தபோது இரண்டு ஆடுகள் இறந்து கிடந்தது. மேலும் 3 ஆடுகள் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தன.

நல்லிண நேரத்தில் ஆட்டுப்பட்டிகள் புகுந்த தெரு நாய் கூட்டம் ஆடுகளை கொன்றது தெரிய வந்ததுகடந்த சில நாட்களுக்கு முன்பு ஈரோடு மாநகராட்சி உட்பட்ட பகுதியில் தெருநாய்கள் கடித்ததில் 4 ஆடுகள் இறந்தது.

தொடர்ந்து தெருநாய்கள் கடித்து ஆடுகள் உயிரிழக்கும் சம்பவத்தால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தெரு நாய்களை கட்டுப்படுத்த மாநகராட்சி நிர்வாகம் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

### கனடா நாட்டில்

## இந்திய மருத்துவ மாணவர் சுட்டுக் கொலை!

டோரண்டோ, டிச. 28

கனடாவில் மருத்துவப் படிப்பு பயின்று வந்த இந்திய மாணவர் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கனடாவில் சில தினங்களுக்கு முன்பு, டொரன்டோவில் 30 வயதான இந்திய வம்சாவளி ஹிமான்ஷி குரானா என்பவர் அவரது ஆண் நண்பரால் கொடூரமாக கொலை செய்யப்பட்டார்.இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, டொரன்டோ ஸ்கார்போரா பல்கலை வளாகம் அருகே 20 வயதான இந்திய மருத்துவ மாணவர் ஷிவாங்க் அவஸ்தி மர்ம நபரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இது இந்தியர்களுக்கு மேலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.ஹைலேன்ட் க்ரீக் டிரைல் மற்றும் ஓல்ட் கிங்ஸ்டன் சாலையில் நடந்த இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்து போலீசார் விரைந்து சென்றனர். இதையடுத்து, துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் குறித்து விசாரணையை தொடங்கினர். இந்த ஆண்டில் மட்டும் இது டொரன்டோவில் நிகழ்ந்த 41–ஆவது கொலை சம்பவமாகும்.இந்நிலையில், இந்திய மருத்துவ மாணவர் துப்பாக்கியால்சுட்டுக ்கொல்லப்பட்ட சம்பவம் வேதனை அளிப்பதாக கனடாவுக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. மேலும், இந்த கடினமான சூழலில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருடன் தொடர்பில் இருப்பதாகவும், அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுப்பதாகவும் உறுதியளித்துள்ளனர்.

### காதலிக்க மறுத்த

## திருமணமான இளம் பெண்ணை துப்பாக்கியால் சுட்ட வாலிபர்!

குர்கான், டிச. 28

டெல்லியில் உள்ள நஜாப்கர் பகுதியைச் சேர்ந்தவர் கல்பனா (வயது 25). இவர் டெல்லி அருகே உள்ள ஒரு கேளிக்கை விடுதியில் பணி புரிகிறார். திருமணமான இவர் கணவருடன் வசித்து வருகிறார். டெல்லி சங்கம் விகார் பகுதியைச் சேர்ந்த துஷார் ( 28). கல்பனாவுக்கு கடந்த 6 மாதங்களுக்கு முன்பு தான் திருமணம் நடைபெற்றது.

இந்த விவரம் துஷாருக்கு தெரியும். இருந்தாலும் அவர் கல்பனாவை காதலித்து வந்தார். ஆனால் அதற்கு கல்பனா எதிர்ப்பு தெரிவித்தார். இருந்தாலும் கல்பனா வேலைக்கு செல்லும் போதெல்லாம் அவரைப் பின்தொடர்ந்து சென்று தன்னை காதலிக்கும்படியும், திருமணம் செய்துகொள்ளும்படியும் துஷார் தொந்தரவு கொடுத்து வந்தார்.

இந்நிலையில் கடந்த 19–ஆம் தேதி மாலையில் வழக்கம் போல் கல்பனா கேளிக்கை விடுதிக்கு பணிக்குச் சென்றார். அங்கு தனது நண்பர் சுபம் என்பவருடன் துஷாரும் சென்றிருந்தார். அப்போது கல்பனாவிடம் தன்னை திருமணம்செய்துகொள்ளும் படி வற்புறுத்தினார். அதற்கு கல்பனா முடியாது என மறுத்தார்.

இதனால் ஆத்திரம் அடைந்த துஷார் தான் ஏற்கனவே மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து கல்பனாவை சுட்டார். இதில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. உடனே அவர் அங்குள்ள மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இது குறித்து போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள். மேலும் துப்பாக்கியால் சுட்ட துஷார் மற்றும் அவரது நண்பர் சுபம் என்கிற ஜானி ஆகிய இருவரையும் கைது செய்தனர். இச்சம்பவத்திற்கு உடந்தையாக இருந்ததாக மேலும் 2 பேரை போலீசார் வலை வீசித் தேடி வருகின்றனர்.



## திருப்பத்தூர் அருகே புதிய பகுதி நேர நியாய விலைக்கடை; தேவராஜி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

வாணியம்பாடி, டிச.28

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த சோமநாயக்கன்பட்டி ஊராட்சி பூசணிக்காய் வட்டம் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக்கடை திறப்பு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக திருப்பத்தூர் மாவட்ட திமுக செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி கலந்து கொண்டு ரிப்பன் வெட்டியும் குத்து விளக்கு ஏற்றி கடையை திறந்து வைத்து விற்பனையை தொடங்கி வைத்து சிறப்புரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியில் ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றிய செயலாளர் கே.சதிஷ்குமார், ஒன்றியக்குழு தலைவர் சத்யா சதீஷ் குமார், பொதுக்குழு உறுப்பினர் சத்திய நாராயணன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் க.தேவராஜ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் செந்தில்குமார், ஒன்றிய கவுன்சிலர் சாந்தன்,

ஊராட்சிமன்ற தலைவர் முருகன் மற்றும் அரசு துறை அதிகாரிகள், கட்சி தொண்டர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அரசு அனைத்து துறை சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில்,21 அம்ச கோரிக்கைகளைவலியுறுத்திஆர்ப்பாட்டம்சேலம்கோட்டைமைதானத்தில்நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில், காலம் முறை ஊதியம், பணி நிரந்தரம், பழைய ஓய்வூதிய திட்டம், காலி பணியிடங்களை நிரப்புதல், மாற்றுத்திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு உயர்வு, உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

### வாணியம்பாடியில்

## 8 பேர் உயிரிழந்ததை தொடர்ந்து மூடப்பட்டிருந்த பல் மருத்துவமனையை ஞானமீனாட்சி திறந்து வைத்தார்!

வாணியம்பாடி, டிச.28

திருப்பத்தூர் வாணியம்பாடி கச்சேரி சாலையில் பல் மருத்துவர் அறிவரசன் என்பவர் நடத்தி வந்த தனியார் பல் மருத்துவமனையில் ( VTS டென்டல் கிளினிக்) கடந்த 2022 2023 ஆம் ஆண்டு இவரிடம் பல் சிகிச்சை பெற்று வந்த நியூடவுன் பகுதியை சேர்ந்த இந்திராணி, வரதன், கோணாமேடு பகுதியை சேர்ந்த நர்மதா,பெருமாள் பேட்டை பகுதியை சேர்ந்த ஜெய்சிலி, பெரியபேட்டை பகுதியை சேர்ந்த ஆபிசூர் ரரஹமான், உதயேந்திரம் பகுதியை சேர்ந்த அனிதா,அலசந்தாபுரம் பகுதியை சேர்ந்த சத்யா, செங்கிலிகுப்பம் பகுதியை சேர்ந்த இளங்கோவன் உட்பட 10 பேரில் 8 பேர் அடுத்தடுத்து 6 மாத காலத்திற்குள் உயிரிழந்தனர்.

இந்நிலையில் 2023 ஆம் ஆண்டு திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகரில் உள்ள ஒரு பல் மருத்துவமனையில் இருந்து மூளையில் ஏற்பட்ட பாக்டீரியா தொற்று காரணமாக 8 பேர் இறந்ததாக திலான்செட்டில் வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கையை தொடர்ந்து வாணியம்பாடியில் உள்ள தனியார் பல் மருத்துவமனையில் திருப்பத்தூர் மாவட்ட சுகாதாரத்துறை இணைய இயக்குனர் ஞானமீனாட்சி மற்றும் வாணியம்பாடி அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் சிவ சுப்பிரமணியம் மற்றும் இந்திய பல் மருத்துவ சங்கத்தினர் குழு ஆகியோர் சம்மந்தப்பட்ட மருத்துவமனையில் நேரில் ஆய்வு மேற்கொண்டு மருத்துவமனையை முடிசென்றனர்.

இந்நிலையில் ஆய்வு மேற்கொண்ட இந்திய பல் மருத்துவ சங்க குழுவினர் மாவட்ட சுகாதார துறை இணை இயக்குனர் ஞானமீனாட்சிக்கு ஆய்வறிக்கை அனுப்பி இருந்தனர். அதில் மூடப்பட்டுள்ள பல்.மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க எல்லாம் தகுதிகளும் உள்ளதால் அதனை செயல்படுத்த திறந்த விட வேண்டும், பல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று 8 பேர் உயிரிழந்த வழக்கு தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாக கூறி இருந்தது. இதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் சிவ சௌந்தர்வல்லி உத்தரவின் பேரில் வாணியம்பாடி வட்டாட்சியர் சுதாகர், நகர போலீசார் முன்னிலையில் சுகாதார இணை இயக்குனர் ஞானமீனாட்சி மூடப்பட்டிருந்த பல் மருத்துவமனையை மீண்டும் திறந்து வைத்தார்.



## புளியம்பட்டி அரசு பள்ளியில் மாநில அளவிலான ஹாக்கி போட்டி!

கிருஷ்ணகிரி டிச.28

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் ஒன்றியம் போச்சம்பள்ளி அடுத்து புளியம்பட்டி அரசு மேல்நிலை பள்ளியில் மாநில அளவிலான ஹாக்கி போட்டி செய்யாறு செஸ் டெவலப்பர்ஸ் மற்றும் பேர்வே எண்டர்பிரைசஸ் இணைந்து நடத்திய மாநில அளவிலான ஆடவர் மற்றும் மகளிர் ஹாக்கி போட்டி நடைபெற்றது. நிகழ்ச்சியில் முதுநிலை மேலாளர் வெளியுறவு துறை, பேர்வே என்டர்பிரைசஸ் டி. பிரசாத் தேவராஜ் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். புளியம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் துரைராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் எஸ் ஆர் ரங்கநாதன் முன்னாள் ஊராட்சி கவுன்சிலர் அம்மன்ராஜா பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் சிவசங்கர் பள்ளி மேலாண்மை குழு தலைவி சுவிதா, மற்றும் துணைத்தலைவி இந்துமதி,ஹாக்கி மாவட்ட செயலாளர் ஞானசேகரன், துணைச் செயலாளர் குமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். போட்டியில் ஏராளமான மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். உதவி தலைமை ஆசிரியர் பழனி, கணித ஆசிரியர் குமார், ஆங்கில ஆசிரியர் மணிகண்டன், உடற்கல்வி ஆசிரியர்கள் ஐமுனா, புஷ்பலதா, தாவரவியல் ஆசிரியர் கோடீஸ்வரன் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் முருகவேல், இரவீந்தர், பிருந்தா, கேசவன், விஜயன், ஜாபர் கான் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியாக வெற்றி பெற்ற மாணவிகளுக்கு கோப்பைகள் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் இரண்டு விளையாட்டு வீரர்களுக்கு கேடயங்கள் வழங்கி கவனிக்கப் பட்டன நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கிரேஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமி நிறுவனர் கோபிநாத் செய்திருந்தார்.



### திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில்

# 651 பயனாளிகளுக்கு இலவச பட்டா!

## அமைச்சர்கள் சாமிநாதன், கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!!

திருப்பூர்,டிச.28

இலவச வீட்டு மனை பட்டா 27, டிசம்பர், திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் எல்லோருக்கும் எல்லாம் சமூக நீதிஅரசு தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தாராபுரம் தெற்கு கொளத்துப் பாளையம் ருத்ராவதி சின்னக்காம்பாளையம் ஆலம்பாளையம் கொழிஞ்சிவாடி செலாம் பாளையம் குண்டடம் இலவசவீட்டு மனைபட்டாகள் 651 பயனாளிகளுக்கு பட்டாக்கள்

வழங்கப்பட்டன. கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் ஆணைக்கிணங்க முதன்மைக் கழகச் செயலாளர் தமிழ்நாடு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் நேரு ஆலோசனைப் படடி கழகத் துணை பொதுச்செயலாளர் தமிழ்நாடு தமிழ் வளர்ச்சி செய்தித் துறை அமைச்சர் சாமிநாதன் தமிழ்நாடு மனித வள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழிசெல்வராஜ் தலைமையில் ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் வாழ்த்துக்களோடும்திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் இல,பத்மநாபன் முன்னிலையில் தாராபுரம் வருவாய்கோட்டாட்சியர் பெலிக்ஸ்ராஜா தாராபுரம் தாசில்தார் ராமலிங்கம் தாராபுரம் நகர் மன்ற தலைவர் பொறியாளர் கு. பாப்புகண்ணன் தாராபுரம் நகர கழகச் செயலாளர் பொறியாளர் முருகானந்தம் அரசு பணியாளர்கள். நகராட்சி பணியாளர்கள்.

தலைமை செயற்குழு உறுப்பினர் தனசேகர் ஒன்றிய கழகச் செயலாளர்கள், செந்தில்குமார் கவுன்சிலர்கள் அன்பழகன் புனிதா சக்திவேல் முத்துலட்சுமி ஐயப்பன் சர்வேயர் இளங்கோ யூசப் ராஜேந்திரன் வழக்கறிஞர் உதயச்சந்திரன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் கண்காணிப்பு குழு உறுப்பினர்சிவ சங்கர் சரவணகுமார் பேரூராட்சி தலைவர்கள், செயலாளர்கள்,மாவட்டக் கழக நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள்,சார்பணி நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், நகர கழக நிர்வாகிகள், மற்றும் பயனாளிகள், பொதுமக்கள், மற்றும் ஊடக நண்பர்கள் அனைவரும் கலந்து நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

### கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்று, நாளை

# எஸ்.ஐ.ஆர். சிறப்பு முகாம்கள்!

## மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!!

கிருஷ்ணகிரி,டிச.28

கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க. செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல்சிறப்புதீவிரதிருத்தப்பணிகள் நடை பெற்று வருகிறது. அதன் படி 19.12.2025 அன்று வரைவு வாக்காளர்பட்டியல்கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெளியிடப்பட்டுள்ளது.



இந்த பட்டியலில் 01.01.2026 யை தகுதிநாளாக கொண்டு 18 வயது நிரம்பியவர்கள் படிவம் 6 உடன் உறுதிமொழிபடிவத்தை சமர்ப்பித்து தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம்.

வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறாத தகுதியுடைய வாக்காளர்கள் எவரேனும்இருப்பின்அவர்களும்18.01.2026 வரையிலான ஆட்சேபனை மற்றும் உரிமை கோரல் காலத்தில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து தங்களது பெயரினை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம். இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, புதிதாக பெயர் சேர்த்தல் படிவம் 6. பெயரை நீக்குதல் படிவம் 7. வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்தல் போன்றவற்றிக்கு படிவம் 8 ஆகியவற்றை இன்று 27, நாளை 28 மற்றும் ஜனவரி 3, 4 ஆகிய தேதிகளில் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் நடைபெறவிருக்கும் சிறப்பு முகாம்களில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து வாக்கா ளர்ராக தங்களை பதிவு செய்துக் கொள்ளலாம்.

மேலும் வாக்காளர்கள் தாங்கள் வீட்டிலிருந்தே விண்ணப்பிக்க ஏதுவாக https//voters.cci.gov.in செயலியினை பதிவிறக்கம் செய்தும் விண்ணப்பிக்கலாம்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்காளர்களும், வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களை சேர்த்து ஜனநாயக கடமையை ஆற்றிட ஏதுவாக இந்த சிறப்பு முகாம்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள், முகவர்கள் அனைவரும் துரிதமாக செயல்பட்டு இந்த சிறப்பு முகாம்களில் எஸ்ஐஆர் விண்ணப்பம் பூர்த்தி செய்து வழங்காதவர்கள், விடுபட்ட வாக்காளர்களை சேர்ப்பதற்கு துறித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் .

இவ்வாறு அவர் அறிவிக்கையில் தெரிவித்துள்ளார்.



கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் சத்தி சாலை சரவணம்பட்டி அம்மன் நகர் அருகில், பில்லூர்2 குடிநீர் திட்டத்தின் கீழ் சுமார் 1000 மி.மீட்டர் விட்டம் அளவிலான பிரதான குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளதை சீர் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைமாநகராட்சிஆணையாளர்மா.சிவகுருபிரபாகரன்நேரில்சென்று,பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, சீரமைப்பு பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன் உதவி செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி, உதவி பொறியாளர்கள் நாசர், உத்தமன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட தொன்மை மாறாமல் புனரமை க்கப்பட்ட விக்டோரியா பொது அரங்கத்தினை பொதுமக்கள் ஆர்வமுடன் கண்டுகளித்தனர்.

# போச்சம்பள்ளி அரசு மேல்நிலைப்பள்ளியில், கூடுதல் வகுப்பறை கட்டுமான பணியை மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார்!

போச்சம்பள்ளி,28

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி யில், நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் 7 புதிய வகுப்பறை கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜை விழா நடந்தது.



நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் சாந்தமூர்த்தி தலைமை தாங்கினார். பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் கவுதம் வரவேற்று சிறப்பு அழைப்பாளராக

மதியழகன் எம்எல்ஏ பங்கேற்பு

பேசினார். மாவட்ட செயலாளர் மதியழகன் எம் எல்ஏ., கலந்து கொண்டு பூமி பூஜை செய்து, பணி களை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் வர்த்தகர் அணி மாநில துணை செயலாளர் அன்பரசு, மாவட்ட பொருளாளர் கதிரவன், இளைஞர் அணிமாவட்ட துணை அமைப்பாளர் சரவணன் நெசவாளர்அணி மாவட்ட அமைப்பாளர் அம்மன் ராஜா, தாபா சங்கர்,நேதாஜி, சம்புதீன், சிக்கந்தர், வினோத், சதீஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பள்ளி தலைமை ஆசிரியை காந்திமதி நன்றி கூறினார்.

### தர்மபுரி தொப்பூர் கணவாயில்

# தாறுமாறாக ஓடி கவிழ்ந்த வேன் மீது கார் மோதல்!

## 2 பெண்கள் உள்பட 5 பேர் காயம்!!

நல்லம்பள்ளி,டிச,28

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து கோவைக்கு தக்காளி பாரம் ஏற்றுக் கொண்டு வேன் புறப்பட்டது.இந்த பிக்கப் வேன், தர்மபுரி மாவட்டம் தொப்பூர் கணவாய் வழியாக நேற்று இரவு வந்தது. தொப்பூர் கணவாய் பகுதியில் வந்தபோது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த அந்த வேன் தாறுமாக ஓடியதில் சாலையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. விபத்து நடந்த சிறிது நேரத்திலேயே பின்னால் வந்த கார், சாலையில் கவிழ்ந்த தக்காளி லோடு பிக்கப் வேனின் பின்பகுதியில் கார் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் காரில் வந்த 2 பெண்கள், பிக்கப் வேன் டிரைவர் உட்பட 5 பேர் காயம் அடைந்தனர். விபத்து பற்றி தகவல் அறிந்து வந்த போலீசார் மற்றும் சுங்கச்சாவடி ரோந்து படையினர் ஒன்றிணைந்து விபத்தில் சிக்கி தவித்த 5 பேரையும் மீட்டு சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.



விபத்தால் தருமபுரி – சேலம் தேசிய நெடுஞ்சாலையில் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

பின்னர் போலீசார் உதவியோடு மீட்புக்குழுவினர் விபத்துக்குள்ள வாகனங்களை அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீர்செய்தனர். விபத்து குறித்து தொப்பூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சேலம் மாவட்ட தலைவர் இந்தியநாதன் மற்றும் இணைப்பு சங்கங்களின் மாவட்ட தலைவர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் கலந்து கொண்ட கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் சேலம் கோட்டை மைதானத்தில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பணி நிரந்தரம், பழைய ஓய்வூதிய திட்டம், கால முறை ஊதியம், மாற்றுத்திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு உயர்வு, உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக இன்று கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நூற்றுக்கு மேற்பட்ட அரசு ஊழியர்கள் கலந்து கொண்டு நடத்தினர்

### ராசிபுரம் அருகே

# கார் மோதி தொழிலாளி சாவு!

ராசிபுரம்,டிச.28

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அடுத்த அத்தனூர் ஆயிப்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் மணி (65). சேலம் மாவட்டத்தில் உள்ள மரக்கடையில் கூலி தொழிலாளியாக பணியாற்றி வந்தார்.

வழக்கம்போல்வேலை முடித்து மாலை 6 மணி அளவில் பேருந்தில் வீடு திரும்பிய மணி, அத்தனூர் அம்மன்கோவில்பேருந்து நிறுத்தத்தில் இறங்கி, ஆயிப்பாளையத்தில் உள்ள தனது வீட்டிற்கு செல்வதற்காக நாமக்கல்–சேலம் தேசிய நெடுஞ்சாலையை கடக்க முயன்றார்.

அப்போது அடையாளம் தெரியாத கார் அவர் மீது மோதியதில், தூக்கி வீசப்பட்ட அவர் தலையில் பலத்த காயம் அடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த வெண்ணந்தூர் போலீசார், உயிரிழந்தவரின் உடலை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பிரேத பரிசோதனைக்காக ராசிபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தினார்கள்.

### வெள்ளக்கல் அருகே

# சாலையில் தாறுமாறாக ஓடி கால்வாயில் கவிழ்ந்த லாரி!



நல்லம்பள்ளி,டிச.28

ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து கடலூர் மாவட்டம் நெய்வேலிக்கு பிளாஸ்டிக் ரோல் பாரம் ஏற்றிக் கொண்டு லாரி புறப்பட்டது. லாரியை ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த கணேஷ்ராம் வயது 25 என்பவர் ஓட்டி வந்தார். இந்த லாரி தர்மபுரி மாவட்டம் வெள்ளக்கல் அருகே தொப்பூர் வனப்பகுதியில் இரவு வந்தது. அப்போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த லாரி சாலையில் தாறுமாறாக ஓடி சாலையோர கால்வாயில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் லாரி டிரைவர் காயம் ஏற்பட்டு சிக்கி தவித்தார்.

விபத்து பற்றி தகவல் அறிந்து வந்த போலீசார் மற்றும் சுங்கச்சாவடி ரோந்து படையினர் இணைந்து காயமடைந்த டிரைவரை மீட்டு சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்து குறித்து தொப்பூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆம்பூர் அருகே துளிர் கல்வி மற்றும் சேவை அறக்கட்டளையின் இணையதளம்!

## வருவாய் கோட்டாட்சியர் அஜிதா பேகம் தொடங்கி வைத்தார்!!



ஆம்பூர்.டிச.28

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த மேல் சாணங்குப்பம் கிராமத்தில் ஈ.இளங்கோ என்பவர் துளிர் கல்வி மற்றும் சேவை அறக்கட்டளை நடத்தி வருகிறார்.

இந்த அறக்கட்டளை மூலமாக கிராம பகுதி மாணவர்களுக்கும், ஏழை எளிய மாணவர்களுக்கு இலவசமாக அரசு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளையும், இரவு நேரத்தில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவசமாக டியூஷன் நடத்தி வருகிறார்.

மேலும் அறக்கட்டளையில் பயின்ற 12 மாணவர்கள் கடந்த இரு தினங்களுக்கு முன்பு நடைபெற்ற காவலர் போட்டி தேர்வு எழுதியுள்ளனர். இந்நிலையில் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம மாணவர்களும் கல்விக்கான வழிகாட்டுதல், வறுமையில் உள்ளவர்களுக்கு கல்விக்கு உதவுதல் மற்றும் அரசு போட்டிதேர்வுகளுக்கு உதவுதல் போன்ற முக்கிய நோக்கத்துடன் www.thulireducation.com இணையதளம் துவங்கப்பட்டுள்ளது.

இதனை இரு தினங்களுக்கு முன்பு வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர் அஜிதா பேகம் இணையதளத்தை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் துளிர் கல்வி மற்றும் சேவை அறக்கட்டளை நிறுவனர் ஈ. இளங்கோவன், உறுப்பினர்கள் ஸ்ரீதர், அருண், குணா ஆகியோர் உடன் இருந்தனர்.



கடத்தூர் அருகே மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டியை தி.மு.க. மாவட்ட செயலாளர் பழனியப்பன் தொடங்கி வைத்தார்.

### கடத்தூர் அருகே

# மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டி!

கடத்தூர் டிச.28

கடத்தூரை அடுத்த, தாளநத்தம் கிராமத்தில் கோவிந்தராஜ், தீபமாலை ஆகியோர் நினைவாக மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டியில் துவக்க விழாவிற்கு, மாநில வர்த்தக அணி தலைவர். சத்தியமூர்த்தி , ஒன்றிய செயலாளர், சிவப்பிரகாசம் முன்னிலை வகித்தனர், ஊர் தலைவர் ரமேஷ், நடராஜன் ஆகியோர் வரவேற்றனர்,

சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அமைச்சர் திமுக மாவட்ட செயலாளர் பழனியப்பன் கிரிக்கெட் போட்டியினை துவக்கி வைத்தார் .

வீரர்களிடம் கைகுலுக்கி ஊக்கப்படுத்தி ,விளையாட்டில் முன்னேற வேண்டும் என வாழ்த்துரை வழங்கினார் , இதில் பல்வேறு கிராமங்களில் இருந்து சுமார் 30 மேற்பட்ட அணி வீரர்கள் பங்கேற்றனர்.

இதில் தாழை பாண்டியன்,பெரியசாமி. முருகன், சதீஷ்,வடிவேல் பச்சையப்பன், விவேகானந்தன் ஆகிய முக்கிய நிர்வாகிகள், விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் , இந்நிகழ்வில் பங்கேற்றனர்.